

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.001/2015
தேதி.02.01.2016

# ஜல்லிக்கட்டு நடத்திட அனுமதி கோரி சமூக வலைத்தளங்களின் மூலம் பிரதம மந்திரிக்கு தமிழக மக்கள் கோரிக்கை அனுப்பவும் சமக தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அறிக்கை

தமிழகத்தின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு நடத்திட மத்திய அரசு ஆவன செய்யும் என்று தமிழக மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். காலதாமதாமாகும் ஒவ்வொரு நாளும் ஜல்லிக்கட்டு நடக்குமா? நடக்காதா? என்ற சந்தேகங்கள் உருவாகி வருகிறது.

ஜல்லிக்கட்டு என்றால் என்ன? எப்படி ஏற்பாடு செய்யப்படுகிறது? எதனால் ஜல்லிக்கட்டு நடத்தப்படுகிறது என்று எந்த விவரமும் புரியாதவர்கள், இதுவரை தங்கள் வாழ்நாளில் ஜல்லிக்கட்டை பார்த்திராதவர்கள் எல்லாம் ஜல்லிக்கட்டை தடுக்க நினைக்கிறார்கள். தமிழ் இனத்திற்கு விரோதமாக தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத ஒரு கூட்டம் டெல்லியில் செயல்பட்டு வருகிறது.

தமிழகத்தை ஆளுகின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உள்பட பிரதான கட்சிகள் மற்றும் அனைத்துக் கட்சிகளும் ஜல்லிக்கட்டு வேண்டும் என்று குரல் கொடுக்கின்றன. மத்திய அமைச்சர்களும் ஜல்லிக்கட்டு நடத்திட வழி காணப்படும் என்று தொடர்ந்து தெரிவித்து வருகிறார்கள். இருப்பினும் இன்னும் சரியான தீர்வு கிடைக்கவில்லை.

தமிழக மக்களை நம்பி, தமிழக மக்களுக்காக அரசியல் இயக்கங்கள் நடத்தும் அனைத்துக் கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டில் இருந்தும் ஜல்லிக்கட்டு நடத்துவதில் தமிழக மக்களின் விருப்பத்தை பூர்த்தி செய்ய முடியாதது வேதனையான ஒன்றாகும்.

ஜல்லிக்கட்டுப் பிரச்சனையில் தமிழக அரசியல் இயக்கங்கள் ஓரணியில் திரள வேண்டும்.

தமிழர்களின் உணர்வை எடுத்துக் காட்டும் விதமாக மத்திய அரசுக்கு இணைந்து கோரிக்கை வைத்திட வேண்டும். தாமதமாகும் ஒவ்வொரு நாளும் பின்னடைவைத் தரும்.

**மாண்புமிகு பிரதமர் மோடிக்கு வேண்டுகோள்**

**சமூக வலைத்தளங்கள்**

சமூக வலைத்தளங்களில் மத்திய அரசு, தமிழர்களின் உணர்வை ஏற்று ஜல்லிக்கட்டுக்கான தடையை நீக்கிட அவசரச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்று

பிரதம மந்திரி அவர்களுக்கு
**Twitter : @narendramodi**
**FB : Narendra Modi**
**Website : www.narendramodi.in**

சுற்றுச்சூழல் மந்திரி பிரகாஷ் ஜவ்டேகர் அவர்களுக்கு

**Twitter : @PrakashJavadekar**
**FB : Prakash Javadekar**
**Website : www.prakashjavadekar.com**

ஆகிய ஊடகங்கள் மூலம் தமிழ் உணர்வாளர்கள் அனைவரும் கோரிக்கை வைத்திட வேண்டும் என வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இது தற்போதைய முக்கியமான பணி ஆகும்.

திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் அருகே உள்ள மேல்சோழங்குப்பத்தில் நேற்றைக்கு முன்தினம் காளை விடும் திருவிழா நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டுள்ளனர். சட்டத்தை மீறி நடைபெற்றது வருத்தமளித்தாலும், சட்டங்கள் அனைத்தும் மக்களுக்காகவும், மக்கள் நலனிற்காகவும் தான் என்பதை நாம் உணர வேண்டும்.

இதே நிலை மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் பரவினால் நாம் என்ன செய்வது? சட்டத்தை மீறும் சூழ்நிலைக்கு நாமே மக்களை ஆளாக்கலாமா?

தமிழர்களின் எத்தனையோ கலாச்சார அடையாளங்களை, நாம் இழந்திருக்கிறோம், எஞ்சி நிற்பதில் ஜல்லிக்கட்டும் ஒன்று. அதையும் நாம் வாழ்ந்த காலத்தில் இழந்துவிட்டோம் என்று ஆகி விடக்கூடாது ஒன்றுபடுவோம். தமிழர்கள் மானம், வீரம் காப்போம், ஜல்லிக்கட்டை மீட்போம்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்